

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | ஜூன் 20, 2019 | புரட்சி 18 | முழக்கம் 23 | விலை: ரூ.3.00


## ஒற்றை இலக்க மதிப்பெண் பெற்றாலும் மருத்துவக் கல்லூரியில் இடம் உண்டு

# ‘நீட்’ தகுதித் தேர்வு அல்ல; வணிகம்!

***‘நீட்’ தகுதித் தேர்வு என்ற வாதம் பொய்யானது. உண்மையில் அது கல்வி வணிகக் கொள்ளைக்குக் கதவைத் திறந்து விடுகிறது.***

### நீட் தகுதியை உயர்த்துகிறதா?

மருத்துவக் கல்லூரி படிப்பின் தகுதியை உயர்த்தவும் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் கட்டணக் கொள்ளையை முடிவுக்கு கொண்டு வருவதற்கும் ‘நீட்’ தேர்வை நடத்துவதாக நடுவண் அரசு வாதிட்டு வருகிறது. ஆனால், உண்மையில் ‘நீட்’ மேற்குறிப்பிட்ட இரண்டு பிரச்சினைகளுக்கும் நேர் எதிராகவே செயல்படுகிறது.

இயற்பியல், வேதியியல் என்ற இரண்டு பாடங்களுக்கான 180 மதிப்பெண்களில் ஒரு மதிப்பெண் கூட பெறாத பூஜ்யம் பெற்ற மாணவர்கள் 2017ஆம் ஆண்டு பஞ்சாபில் மருத்துவக் கல்லூரியில் இடம் பிடித்திருக்கிறார்கள். தவறான விடைக்கு மதிப்பெண் குறைக்கப்படும் என்ற அடிப்படையில் மேற்குறிப்பிட்ட இரண்டு பாடங்களிலும் மதிப்பெண் குறைவுக்கு உள்ளானவர்கள் இந்த மாணவர்கள் இது குறித்து ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு (ஜூன் 15, 2019) அதிர்ச்சியான ஆய்வுச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

வேதியல், இயற்பியலில் பூஜ்யம் அல்லது 10க்கும் கீழே ஒற்றை இலக்க மதிப்பெண் பெற்ற 85 சதவீதம் பேர் பஞ்சாப் மருத்துவக் கல்லூரியில் 2017 ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டுள்ளார்கள். மிக மிகக் குறைந்த மதிப்பெண் பெற்ற மாணவர்களைச் சேர்க்கும் பஞ்சாப் மருத்துவக் கல்லூரிகள் நாட்டிலேயே மிக அதிகக் கட்டணம் வாங்கும் கல்லூரிகளாகும். சுதேஷ் என்ற மருத்துவக் கல்லூரி கல்விக் கட்டணமாக ரூ.68 இலட்சம் வாங்குகிறது. அரசு நிர்ணயிக்கும் கட்டண சீரமைப்புக்குக் கீழே வராமல் சில தனியார் மருத்துவக் கல்லூரிகள் பஞ்சாபில் தங்களுக்குள் ஒரு குழுவாக இணைந்து (Group owned University) செயல்படுகின்றன. பஞ்சாப் மாநிலத்தில் மட்டுமே இந்த ஆய்வு நடத்தப்பட்டாலும் இதே அடிப்படையில் மிகக் குறைந்த மதிப் பெண்களைப் பெற்ற மாணவர்கள் பல மாநிலங்களில் பெரும் தொகையைக் கட்டணமாக செலுத்தி சேர்த்துள்ளனர் என்றும் செய்தி வெளியிட்டுள்ளது. ‘நீட்’ தேர்வு தகுதிக்கான தேர்வு என்று நடுவண் ஆட்சி வாதிடுவது பொய்த்துப் போய் விட்டது என்றும் அந்த ஏடு செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியா முழுவதும் நடப்பாண்டில் சுமார் 65,000 மருத்துவப் படிப்புஇடங்கள் உள்ளன. இந்த ஆண்டில் நீட் தேர்வு எழுதிய 14,10,755 பேரில் 7,97,042 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். நியாயமான முறையில் மாணவர் சேர்க்கை நடத்தப்பட்டால், இவர்களில் முதல் 65,000 இடங்களைப் பெற்றவர்களுக்கு மட்டும்தான் இடம் கிடைக்க வேண்டும். ஒருவேளை இடஒதுக்கீட்டுக் கணக்கின்படி பார்த்தாலும் முதல் 1 இலட்சம் இடங்களுக்குள் வந்தவர்களுக்கு மட்டுமே மருத்துவக் கல்வி சாத்தியமாக வேண்டும்.

ஆனால், முதல் 50,000 இடங்களுக்குள் வந்தவர்களுக்குக்கூட இடம் கிடைப்பதில்லை. அதே நேரம் 7 இலட்சத்துக்கும் அதிகமான தர வரிசையில் வந்தவர்களுக்கு மருத்துவ இடம் கிடைக்கிறது.

தனியார் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் ஓராண்டுக்கு ரூ.25 இலட்சம் வரை கட்டணம் வசூலிக்கப்படுவதுதான் இதற்குக் காரணம். நீட் தேர்வில் 60 சதவீத மதிப்பெண் பெற்றவர்களில் பலர் அந்தக் கட்டணத்தைக் கட்ட முடியாமல் விலகிக் கொள்ள, கோடிகளைக் குவித்து வைத்திருக்கும் பலர் 15 சதவீதத்துக்கும் குறைவான மதிப்பெண்களை மட்டுமே எடுத்திருந்தாலும், பணத்தைக் கட்ட முடியும் என்பதால் மிக எளிதாக சேர்ந்து விடுகின்றனர்.

மொத்தத்தில் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் மருத்துவப் படிப்புக்கு கோடிகளைக் கொட்டும் மாணவர்களைப் பிடித்துத் தரும் வேலையைத் தான் நீட் தேர்வு செய்கிறது. நீட் தேர்வால் மருத்துவக் கல்வி வணிகமயமாகிவிட்டது.

### சத்துணவில் வெங்காயம் பூண்டுக்கு தடையாம்!

மதுரை மாவட்டம் வலையபட்டி கிராமத்தில் அங்கன்வாடி மய்யத்தில் தலித் சமூகத்தைச் சார்ந்த எம். ஜோதிலட்சுமி, எம். அன்னலட்சுமி என்ற தலித் பெண்கள், குழந்தைகளை பராமரிக்கும் பணியாளர்களாக நியமனம் செய்யப்பட்டனர். உள்ளூர் ஜாதி ஆதிக்கவாதிகள், தலித் பணியாளர்கள் தங்கள் குழந்தைகளைப் பராமரிப்பதா என்று எதிர்ப்பு தெரிவித்து, குழந்தைகளை அங்கன்வாடிக்கு அனுப்ப மறுத்தனர். வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் ஜாதி வெறியர்கள் மீது வழக்குத் தொடராமல் தமிழக அரசு, இந்த இரண்டு தலித் பெண்களையும் இடமாற்றம் செய்தது. கடும் எதிர்ப்புக்குப் பிறகு அதே ஊரில் ‘தலித்’ பகுதியில் இவர்களை நியமனம் செய்திருக்கிறது. இத்தனைக்கும் 1563 அங்கன்வாடி பணியாளர்கள் பதவிக்கு ஆளும் கட்சியினர் இலஞ்சம் வாங்கிக் கொண்டு, 2017லிருந்து பணியிடங்களை,7 நிரப்பாமல் காலம் கடத்திய நிலையில் நாகராஜன் என்ற மாவட்ட ஆட்சித் தலைவர் நேர்மையாக இந்தப் பணியிடங்களை தேர்வு செய்யப்பட்டவர்களைக் கொண்டு நிரப்பினார். அதற்காக அ.இ.அ.தி.மு.க. ஆட்சி அடுத்த நாளே அவருக்கு இடமாற்றல் ஆணை வழங்கி, ‘தண்டனை’ அளித்தது. தமிழ்நாட்டில் சத்துணவுடன் தி.மு.க. ஆட்சி காலத்தில் வாரம் இரண்டு நாள் ‘முட்டை’ போடப்பட்டது. அதில் ஒரு நாள் ‘செவ்வாய்க் கிழமை’. செவ்வாய்க் கிழமை அசைவம் சாப்பிடக் கூடாத ‘புனித நாள்’ என்று கூறி மதவாத சக்திகள் எதிர்ப்பு தெரிவிக்கவே முட்டை போடுவது வேறு ஒரு நாளுக்கு மாற்றப்பட்டது. வடமாநிலங்களில் சத்துணவுக் கூடங்களில் ‘தலித்’ பெண்களை நியமிப்பது கனவில்கூட நினைத்துப் பார்க்க முடியாது.

இப்போது கருநாடக மாநிலத்திலிருந்து ஒரு செய்தி வந்திருக்கிறது. உலகம் முழுதும் ‘அரே கிருஷ்ணா; அரே ராமா’ அமைப்புகளை நடத்தி வரும் ‘இஸ்கான்’ என்ற பார்ப்பன அமைப்பு, ‘அக்சய பாத்திர பவுண்டேஷன்’ என்ற தொண்டு நிறுவனத்தை நடத்தி வருகிறது. கருநாடக மாநிலத்தில் பெங்களூரைச் சுற்றியுள்ள 2814 பள்ளிகளுக்கு மத்திய உணவு வழங்கும் ‘ஒப்பந்தம்’ இந்த நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. 4.43 இலட்சம் குழந்தைகளுக்கு இந்த நிறுவனம் மதிய உணவு வழங்குகிறது. இது பார்ப்பனிய அமைப்பு என்பதால் உணவில் ‘பூண்டு’, ‘வெங்காயம்’ இரண்டையும் சேர்க்க மறுக்கிறது. ‘பிராமண’ உணவு முறையில் பூண்டும் வெங்காயமும் தவிர்க்கப்பட வேண்டும் என்று வேதமதத் தத்துவம் பேசுகிறது இந்த அமைப்பு. குழந்தைகள் மோசமான தரமற்ற உணவை சாப்பிடவே முடியவில்லை என்று கூறி பல கிலோ மீட்டர் தூரம் வீட்டுக்கு நடந்தே சென்று சாப்பிடுகிறார்கள்.

‘ஜன்சுவஸ்தியா அபியான்’ போன்ற தொண்டு நிறுவனங்கள், இஸ்கான் அமைப்பின் இந்த ‘பார்ப்பனிய உணவு திணிப்பு’க்கு கண்டனம் தெரிவித்து வருகின்றன. இஸ்கான் அமைப்போ பூண்டு, வெங்காயத்தை உணவில் சேர்க்கக் கூடாது என்பது எங்களது ‘பிராமண வைதீக உணவுத் தத்துவம்’ என்று அடம் பிடிக்கிறது. கருநாடக அரசு சத்துணவுக்காக தயாரித்துள்ள உணவுக்கான பட்டியலில் வாரத்தில் 4 நாட்கள் வெங்காயத்தைக் கட்டாயம் சேர்க்க வேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறது. ஆனால் ‘இஸ்கான்’ மட்டும் இந்த உணவுப் பட்டியலை மதிக்க மாட்டோம் என்று மீறி செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்துக்கு மத்திய அரசு நிதி உதவியும் மாநிலங்களுக்கு இருப்பதால் மத்திய அரசின் செல்வாக்கில் ‘ஒப்பந்தம்’ பெற்றுள்ள ‘இஸ்கான்’ மாநில அரசு விதிகளை ஏற்க மறுக்கிறது. போடப்படுகிற உணவும் வாயில் வைக்க முடியவில்லை என்று குழந்தைகள் சாப்பிட மறுத்து மீண்டும் வீட்டுக்கே சாப்பிடப் போகிறார்கள் என்று இது குறித்து விரிவான கட்டுரையை ‘இந்து’ ஆங்கில நாளேட்டின் ‘ஞாயிறு மலர்’ (ஜூன் 2, 2019).

### குளறுபடியான ‘கிரிமிலேயர்’

மத்திய அரசு பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இடஒதுக்கீடு செய்துள்ளது. ஆனால், அதில் பாதியளவுகூட இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை. இடஒதுக்கீடே முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத நிலையில் ‘கிரிமிலேயர்’ என்ற பொருளாதார அடிப்படை புகுத்தப்பட்டு, பிற்படுத்தப்பட்டோர் விண்ணப்பிப்பதற்கே வடிகட்டப்பட்டு வருகிறார்கள். இந்த ‘கிரிமிலேயர்’ கூட முறையாக வகுக்கப்படவில்லை.

கிரிமிலேயர் என்ற பொருளாதார வரம்பு, மத்திய அரசுப் பணிகளுக்கு ஒரு அளவும், பொதுத் துறை நிறுவனங்களுக்கான பணிகளுக்கு ஒரு அளவும் மாநிலங்களில் உள்ள மத்திய அரசுப் பணியாளர்களுக்கு ஒரு அளவுமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இந்த முரண்பாடுளை நீக்க வேண்டும் என்று தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் கடந்த அய்ந்து ஆண்டுகளாக மத்திய சட்டத்துறை அமைச்சகத்திடம் வலியுறுத்தி வருகிறது. ஆனால் சட்ட அமைச்சகம் இதற்கு செவி சாய்க்க மறுக்கிறது.

‘அகில இந்திய பிற்படுத்தப்பட்ட ஊழியர் நலச் சங்கம்’ - தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திடம் இது குறித்து முறையிட்டது. கடந்த ஆண்டு மார்ச் மாதம் ‘கிரிமிலேயர்’ நடைமுறைகளை எளிமையாக்குவது குறித்து பரிசீலிக்க நடுவண் ஆட்சி பி.பி. சர்மா என்பவர் தலைமையில் ஒரு நிபுணர் குழுவை நியமித்தது. தொடர் நடவடிக்கையாக தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத் துணைத் தலைவர் லோக்கேஷ் பிரஜாபதி, கடந்த மே 29ஆம் தேதி மத்திய வேலை வாய்ப்புத் துறை அமைச்சகத்திடம் பிற்படுத்தப்பட்டோர் ஒதுக்கீடு கிரிமிலேயர் குறித்த விவரங்களைக் கேட்டார். ஆனால், சட்ட அமைச்சர் எந்த பதிலையும் தரவில்லை. மத்திய அரசு பிற்படுத்தப்பட்ட ஊழியர்களுக்கான ‘கிரிமிலேயரை’ நிர்ணயம் செய்வதில் ‘குடும்ப மாத ஊதியம் மற்றும் குடும்பத்துக்கு விவசாயத்திலிருந்து கிடைக்கும் வருவாய்’ ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று 1983ஆம் ஆண்டு பிறப்பித்த அரசாணை கூறுகிறது. ஆனால், அரசு பொதுத் துறை நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கான ‘கிரிமிலேயர்’ வரம்பில் மேற் குறிப்பிட்ட இரண்டு அம்சங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இதனால் பொதுத்துறை நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டு உரிமைகள் தடுக்கப்படுகின்றன. இதேபோல அய்.ஏ.எஸ். அய்.எஃப்.எஸ்., அய்.பி.எஸ். போன்ற அகில இந்திய சர்வீசுகளுக்கும் பிற்படுத்தப்பட்டோருக்கான கிரிமிலேயர் வரம்பு குளறுபடிகளால் 60 திறன் வாய்ந்த இளைஞர்களின் வேலை வாய்ப்பு பறிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் இந்தக் குளறுபடிகளை சரி செய்யுமாறு 2013ஆம் ஆண்டு சென்னை, டெல்லி உயர்நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டன. அப்போது இரண்டு

4ஆம் பக்கம்


# இராமன் பிறந்த இடத்துக்கு வரலாற்றுச் சான்று கிடையாது

***ஆய்வாளர் ரெமியா தாப்பர் கூறுகிறார்:***

“இராமனைக் கும்பிடுகிறவர்கள் வால்மீகி இராமாயணத்தை அல்லது வேறெந்த இராமாயணத்தை வேண்டுமானாலும் நம்பட்டும். அது அவர்கள் நம்பிக்கை. ஆனால் தங்கள் நம்பிக்கையை நியாயப்படுத்துவதற்காக, வரலாற்றைத் திரித்திடக்கூடாது” என்று வரலாற்று அறிஞர் பேரா.ரொமிலா தாப்பர் கூறினார். “அயோத்தி: நம்பிக்கையாளர்களின் நகரம், நம்பிக்கையற்றவர்களின் நகரம்” (Ayodhya:City of Faith, City of Discord) என்ற தலைப்பில் அயோத்தி நகரத்தின் வரலாறு, வலைசிங் என்பவரால் புத்தகமாக வெளியிடப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தின் வெளியீட்டு விழா, இந்தியக் கலாச்சார மன்றத்தின் (Indian Cultural Forum) சார்பில் புதுதில்லியில் வெள்ளிக்கிழ மையன்று நடைபெற்றது. விழாவில் கலந்து கொண்டு பேரா.ரொமிலா தாப்பர் பேசியதாவது: அயோத்தி கடந்த ஆயிரமாயிரம் ஆண்டுகளில் பலவிதமான கடவுள் நம்பிக்கையாளர்கள் வணங்கும் இடமாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் அதே சமயத்தில் அது வன்முறை வெறியாட்டங்கள் நடைபெற்ற இடமாகவும் இருந்து வந்திருக்கிறது. வலைசிங் தன்னுடைய இந்நூலில் சுமார் 3,300 ஆண்டு கால அயோத்தியின் வரலாற்றை விவரித்திருக்கிறார். இந்த 3,300 ஆண்டுகளில் எண்ணற்ற அரசர்கள், முஸ்லீம் மன்னர்கள், துறவிகள் மற்றும் சீர்திருத்தவாதிகள் வாழ்ந்த இடமுமாக அயோத்தி இருந்திருக்கிறது. அத்தகைய அயோத்தி இன்றைய தினம் இந்திய அரசியல் மற்றும் அரசியல் கற்பனையின் மையமாகவும் மாறியிருக்கிறது. அயோத்தியில் பிறந்ததாகக் கூறப்படும் ராமனின் வரலாறு என்ன? வரலாறு வேறு, கடவுள் நம்பிக்கை வேறு. இரண்டையும் போட்டுக் குழப்பிக்கொள்ளக் கூடாது.

இரண்டுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை அறிந்துகொள்வது அவசியமாகும். வலைசிங் இந்தப் புத்தகத்தில் அயோத்தி பற்றி கடவுள் நம்பிக்கையில் உருவாகியுள்ள கதையிலிருந்து, உண்மையான வரலாற்றை மிகவும் சிறப்பான முறையில் பிரித்துக் காண்பித்திருக்கிறார். அதற்காக அவரை மிகவும் பாராட்டுகிறேன். ஒரு வரலாற்றாசிரியர் என்ற முறையில் ராமன் இங்கே பிறந்தான் என்பதற்கான வர லாற்றுச்சான்று எதுவும் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வால்மீகி இராமாயணத்தை பல சமூகத்தினரும் தமதாக்கிக் கொண்டிருக்கிறார்கள் கேரளாவில் மாப்பிள்ளை இராமாயணம் என்பது முஸ்லிம்களின் இராமாயணமாகும். அதேபோல் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஒருவித இராமாயணம் மக்கள் மத்தியில் இருந்து வருகிறது. புத்தமதத்தின் ஜாதகக் கதைகள் பல, வால்மீகி இராமாயணத்தில் இடம் பெற்றிருக்கின்றன. இப்படி பல இராமாயணங்கள் உள்ளன. அதில் ஒரு இராமாயணத்தில், இராவணனை லட்சுமணன்தான் கொல்கிறான். பல இராமாயணங்களில் இராவணன் அரக்கன் அல்ல. மாறாக அவனை மனிதனாகத்தான் சித்தரித்திருக்கிறார்கள். இவ்வாறு இராமனைக் குறித்து உள்ள இராமாயணங்களில் இராமனைக் கும்பிடுகிறவர்கள் தாங்கள் விரும்பும் எந்த இராமாயணத்தை வேண்டுமானாலும் நம்பிவிட்டுப் போகட்டும். இது அவர்களின் கடவுள் நம்பிக்கை சம்பந்தப்பட்ட விஷயம். ஆனால் அதற்காக அவர்கள் எப்போதும் வரலாற்றைப் பயன்படுத்தக் கூடாது. இவ்வாறு பேரா.ரொமிலா தாப்பர் கூறினார்.

## ஜாதி சங்கங்களுக்கு தடை போடுக: மலேசியாவில் தமிழர் தனமான இயக்கம் பிரதமரிடம் மனு




மலேசியாவில் இயங்கும் ஜாதி சங்கங்களின் பதிவை நீக்கம் செய்ய வேண்டும் என்று மலேசிய தமிழர் தன்மான இயக்கம், மலேசிய பிரதமரிடம் நேரில் மனு அளித்துள்ளது. இது குறித்து அமைப்பு சார்பில் செயலாளர் விந்தைக் குமரன் விடுத்துள்ள அறிக்கை:

தமிழர்கள் சாதியெனும் கொடிய உணர்வால் பிரிந்து கிடக்கிறோம். சாதி அடையாளத்தை வெளிப்படையாக சொல்வதற்கு வெட்கப்படும் இந்த காலத்தில்.... சாதியின் பெயரால் சங்கங்கள் அமைத்து செயல்படுவோரும் உண்டு. இது தமிழர்களை மேலும் பிரிப்பது மட்டுமல்லாது இழிவுப்படுத்தும் செயலே... சாதியற்ற தமிழராக ஒற்றுமை நிறைந்த இனமாக நாம் வாழ வேண்டும். அரசு வழியாக சாதியை ஒழிப்பதற்கு... இந்நாட்டில் இயங்குகின்ற சாதி சங்கங்களின் பதிவை ரத்து செய்ய வேண்டும் என மனு ஒன்று மலேசிய நாட்டுப் பிரதமரிடம் அளிக்கப்பட்டது. மலேசியத் தமிழர் தன்மான இயக்கத்தின் முன்னெடுப்பில், தமிழர் ஒற்றுமை பேணும் இயக்கங்களின் ஒத்துழைப்புடன் இந்த மனு அளிக்கப்பட்டது.

## ஆர்.பி.எஸ். ஸ்டாலின் நினைவு நாள் கொளத்தூர் மணி பங்கேற்றார்



பெரியார் தொண்டர் குடந்தை ஆர்.பி.எஸ். ஸ்டாலின் நினைவு நாள் ஜூன் 15ஆம் தேதி மாலை குடந்தை பவளம் திருமண மண்டபத்தில் நடந்தது. ‘கீதாலயனின் நினைவுகள் சட்டக் கல்வி மய்யம்’ சார்பில் நடந்த இந்த நிகழ்வில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்று தோழர் ஆர்.பி.எஸ். ஸ்டாலின், பெரியாரியலுக்கு ஆற்றிய தொண்டுகளை நினைவு கூர்ந்தார். இந்த நிகழ்வில் த.பெ.தி.க. பொதுச் செயலாளர் கோவை இராம கிருட்டிணன், சோழபுரம் கலியன், சாக்கோட்டை இளங்கோவன், வழக்கறிஞர் விவேகானந்தன், பேராசிரியர் ஜெயராமன், எஸ்.எம். ஜெயக்குமார் (அ.ம.மு.க.), வழக்கறிஞர் ஜார்ஜ் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம்**
**ரூ.200**
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகை யாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

# ஜாதி + பணம் = ‘நீட்’

தமிழ்நாட்டிற்கு நாம் ஏன் நீட் வேண்டாம் என்கிறோம்?

இந்த வருட முடிவுகளைக் கொண்டே விளக்குவோம்.

மருத்துவக் கவுன்சில் (MCI) கணக்குப்படி இந்தியாவில் மருத்துவக் கல்லூரி இடங்கள்: 63835

இந்திய முழுவதும் கடை விரித்திருக்கும் ‘ஆகாஷ் ஃபவுன்டேஷன்ஸ்’ (Aakash Foundations) என்ற தனியார் பயிற்சி மய்யத்தில் மட்டும் பயிற்சி எடுத்து வெற்றிபெற்றவர்களின் எண்ணிக்கை : 61649

அதாவது 63835 மருத்துவ கல்லூரி இடங்களில் 96% இடங்களை இந்த ஒரு தனியார் நீட் பயிற்சி மய்யத்தில் பயின்ற மாணவ மாணவிகள் கைப்பற்றியிருக்கின்றனர்.

வெற்றி பெற்ற மாணவர்களிடம் நமக்கு எந்த பிரச்னையும் இல்லை.

இந்த ஆகாஷ் ஃபவுண்டேஷன் என்ற தனியார் பயிற்சி மய்யத்தில் கட்டணம் என்ன என்று பாருங்கள்...

ஓராண்டுக்கு கட்டணம் - ரூ.1,36,526

இரண்டாண்டுக்கான ஒருங்கிணைந்த பயிற்சிக்கு - ரூ. 3,33,350

குறுகிய கால பயிற்சி - ரூ. 32,804

நல்லா கண்ணை விரிய திறந்து பார்த்துக்கொள்ளுங்கள்.

+2 முடித்துவிட்டு விடுமுறையில் 1 மாதம் நடத்தக்கூடிய குறுகிய கால பயிற்சிக் கட்டணம் மட்டுமே ரூ. 32,804.

குறைந்தபட்சம் ரூ.32804/- இருந்தால் மட்டுமே உங்கள் குழந்தையும் என் குழந்தையும் நீட் தேர்வு பயிற்சிக்குப் போய், படிச்சு, நீட் தேர்வு எழுதி பாசாகி டாக்டர் ஆக முடியும்.

இதற்கும் இந்தியாவில் இருக்கும் CBSE, ICSE, State Board போன்ற எந்தவிதமான Syllabus-க்கும் எந்த தொடர்பும் இல்லை. நன்றாக புரிந்து கொள்ளுங்கள்.

இந்த ஆண்டு நீட் தேர்வில் தமிழக அளவில் முதலிடமும், இந்திய அளவில் 12-ஆம் இடமும் பெற்ற கீர்த்தனா படித்தது சென்னையின் பெரிய பள்ளிகளில் ஒன்றான ‘பி.எஸ்.பி.பி.’ பெற்றோர் இருவருமே மருத்துவர்கள். ஆனாலும் கீர்த்தனா இந்த ஆண்டு +2 முடித்துவிட்டு நேரடியாக நீட் தேர்வு எழுதி இந்த வெற்றியை அடையவில்லை. அவர் +2 முடித்த ஆண்டு 2016.

அதாவது சென்னையில் பெரிய பள்ளிகளில் ஒன்றான ‘பி.எஸ்.பி.பி.’-யில், சி.பி.எஸ்.ஈ. பாடத் திட்டத்தில் +2 முடித்த ஒருவர் 2 ஆண்டு தனியார் பயிற்சி மய்யத்தில் இலட்சக்கணக்கான பணம் செலவு செய்து இந்த வெற்றியை அடைந்திருக்கிறார். அவருடைய பேட்டி இணையத்தில் இருக்கிறது. பேட்டியின் போது அவரை சுற்றி பயிற்சி மய்ய ஆசிரியர்கள் குழுமியுள்ளனர். அவர்கள் கழுத்தில் தொங்கும் பட்டைகளே அதற்கு சான்று.

இதனால் தான் நாங்கள் நீட் தேர்வை எதிர்க்கிறோம்.

23 அரசு மருத்துவக் கல்லூரிகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன.

இந்த 23 மருத்துவக் கல்லூரிகளில் ஏதேனும் ஒன்றில் கூட எம்.பி.பி.எஸ். படிக்க ஆண்டு கட்டணம் ரூ.32,804 கிடையாது.

ஆனால், ஆகாஷ் மய்யம் குறுகிய கால பயிற்சிக்கு மட்டுமே ரூ.32000/- வாங்குகிறது.

அனிதாவும் பிரதீபாவும் இந்த 23 அரசு கல்லூரிகளில் இருந்த மருத்துவக் கல்லூரி இடங்களுக்குத் தான் போட்டியிட்டார்கள்.

அதற்கான தகுதியும் அவர்கள் இருவருக்கும் இருந்தது,

அனிதா 1175/1200,

பிரதீபா 1125/1200

ஆனால் நீட் என்ற ஒரு தடுப்பை வைத்து அவர்களைப் “பரலோகம்” அனுப்பியாச்சு.

நாங்களும் தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான இந்த 23 அரசு மருத்துவக் கல்லூரிகளில் இருக்கும் 2500+ இடங்களுக்கு மட்டுமே நீட் தேர்வில் இருந்து விலக்கு கேட்கிறோம். போரூரில் இருக்கும் இராமச்சந்திரா போன்ற தனியார் மருத்துவ கல்லூரிகளுக்கு அல்ல. தமிழ்நாடு அரசு சென்ற ஆண்டு நிறைவேற்றிய நீட் விலக்கு சட்டமும் இதைத் தெளிவாக சொல்லியிருக்கிறது.

இதைத் தான் தரம் என்று நம் மீது திணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கு அவர்கள் நோக்கம் தரத்தை கொண்டு வருவதல்ல. பணக்காரர்களை தவிர வேறு யாரும் மருத்துவர் ஆக கூடாது என்பதுதான்.

ஏதோ தமிழ்நாடு மட்டுமே நீட் தேர்வை எதிர்ப்பதாக ஒரு பொய்யான பிம்பத்தை காவி பக்தர்கள் கூட்டம் கட்டமைக்கிறது. இவர்களின் பிதாமகர் உத்தமசீலர் மோடியே குஜராத் முதல்வராக இருந்த போது நீட் தேர்வை எதிர்த்தவர் தான்.

முதல்வராக இருந்த காலத்தில் ஒன்றை எதிர்ப்பதும் ; பிரதமரான பின் அதை ஆதரிப்பதும் உத்தமசீலருக்கு ஒன்றும் புதிதல்ல.

ஆதார் அட்டை , ஜிஎஸ்டி, நீட் இது மூன்றுமே குஜராத் முதல்வராக மோடி “அய்யா” எதிர்த்தது தான்.

எங்கள் வீட்டில் யாரும் 1200க்கு +2 தேர்வில் 1000 மார்க்கைத் தாண்டியதில்லை. அதனால் 1175 மார்க் வாங்கிய அனிதாவும், 1125 மார்க் வாங்கிய ப்ரதீபாவும் எங்களுக்குப் பெரிதாகத் தெரிகிறார்கள். அந்த குழந்தைகளின் மரணங்கள் எங்களுக்கு உயிர் வலியைத் தருகிறது. அதற்காக இந்த தேர்வு முறையை எதிர்க்கிறோம்.

பரம்பரை பரம்பரையாக கல்வியை தங்கள் குடும்பத்தின் ஒரு அங்கமாக கொண்டிருப்போர்களுக்கு இது சாதாரணமாக தெரிவதில் வியப்பேதுமில்லை. ஏனென்றால் 1200க்கு 1000 மார்க் என்பது அவர்களுக்கு சர்வ சாதாரணம்.

பணம் + ஜாதி = ‘நீட்’

நீட் ஒரு நவீனத் தீண்டாமை!

**– சுதந்திரமுத்து – முகநூலில் எழுதியது**

# இராஜராஜசோழனின் கதை என்ன? (1)

# அடிமைகளின் இரத்தத்தில் எழுப்பப்பட்டதே தஞ்சை கோயில்

***இயக்குநர் இரஞ்சித், இராஜராஜசோழன் குறித்துப் பேசியதற்காகப் பார்ப்பன இராஜாக்களும், 'அவாளின் எடுபிடி'களான, 'சூத்திர' இந்து முன்னணிகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்து, இரஞ்சித்தை கைது செய்ய வேண்டும் என்று ஓலமிடுகின்றன. நீதிமன்றங்களும் இராஜராஜசோழனைப் பற்றிப் பேசுவதா என்று கவலைப்படுகின்றன. இராஜராஜ சோழனின் வரலாறுதான் என்ன?***

பொற்காலம் என்று கொண்டாடும் தமிழினவாதிகள் தமது தமிழ்ப் பெருமிதத்தினுள்ளே வெள்ளாளப் பார்ப்பனக் கூட்டு ஆதிக்கத்தையும் தீண்டாச்சேரியையும் கூச்சமின்றி மறைத்துக் கொள்கிறார்கள்.

உலகின் மிக உயரமான கோபுரங்களைக் கொண்ட, பழமையான பெருங்கோவில்களில் தஞ்சைப் பெரியகோவிலும் ஒன்று. இன்றிருப்பதைப் போன்ற துரிதக் கட்டுமானப் பொறி நுட்பங்கள் ஏதும் வளர்ந்திராத, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, கட்டிடப் பொறியியலில் மாபெரும் சாதனையாகக் கட்டப்பட்டதுதான் இந்தக் கோவில். மழை பெய்தால் நீர்க்கசிவு ஏற்படாதிருக்கப் பதிக்கப்பட்டிருக்கும் நுண்குழாய்கள், ஒரே கல்லினால் ஆன மிகப் பெரும் நந்தி எனப் பல்வேறு பிரம்மாண்டமான பொறியியல் சாதனைகளை எல்லாம் 1000 ஆண்டுகளுக்கு முன்னரே சாதித்துக் காட்டிய மாமன்னன் ராஜராஜன் போற்றிக் கொண்டாடப்படுகிறான். கூடவே அவனது ஆட்சியும் 'தமிழகத்தின் பொற்கால ஆட்சி' என்று புகழப்படுகிறது.

தஞ்சைப் பெரியகோவிலின் கலைநுட்பமும், பொறியியல் சாதனையும் மனிதகுல வரலாற்றில் மகத்தான படைப்புகள்தான். அதே போல எகிப்தின் பாரோக்கள் கட்டிய பிரமிடுகளும், சீனப் பெருஞ் சுவரும்கூட மனித வரலாற்றின் பெரும் சாதனைகள் தான். எனினும் அவை பொற்காலங்களாகக் கொண்டாடப்படுவதில்லை. கலைத்திறனைப் போற்றுவது என்பது வேறு. அரசாட்சியைக் கொண்டாடுவதென்பது வேறு.

வரலாறு நெடுகிலும், மன்னர் ஆட்சி, உழைக்கும் மக்களுக்கு கொடுங்கோல் ஆட்சியாகவே இருந்துள்ளது. இருப்பினும் அம்மன்னர்களின் வரலாற்றுப் பாத்திரம் ஒரே மாதிரியாக இருந்ததில்லை. அசோகனின் பாத்திரமும் புஷ்யமித்திர சுங்கனின் பாத்திரமும் வேறுவேறுதான். முன்னெப் போதும் இல்லாப் பிரம்மாண்டமாக ராஜராஜன் பெரியகோவிலை எழுப்பியது ஏன்? அக்கற்றளிக் கோவிலின் கம்பீரம் மூலம் அவன் எதைச் சொல்ல நினைத்தான்?

ராஜராஜனுக்கு முன்னர் நடுகல் வழிபாடுதான் தமிழ்நாட்டில் பரவி இருந்தது. அக்கம் பக்கமாக குறிஞ்சி (மலை சார்ந்த), முல்லைப் பகுதிகளில் (காடு சார்ந்த) இருந்த வேளிர் எனும் இனக்குடிகளின் அரசுகளை ஒழித்துக் கட்டி, மருதநிலப் பரப்பில் பேரரசுகள் உருவாக்கம் பெற்ற வரலாற்றுக் காலமே ராஜராஜனின் காலம். தொடர் போர்கள் மூலம் சிற்றரசுகளை நிர்மூலமாக்கி, அவ்வரசுகளின் செல்வங்களை எல்லாம் கவர்ந்து வந்து தன் பேரரசைக் கண்டாலே அனைவரும் அச்சத்தால் உறைந்திடச் செய்யும் மாபெரும் சின்னம் ஒன்றை உருவாக்குவதும், அச்சின்னத்தையே அதிகார மையமாக மாற்றுவதுமே ராஜராஜனின் நோக்கமாக இருந்திருக்கிறது. அவ்வாறு உருவாக்கப்பட்டதுதான் பெரிய கோவில்.

சங்கம் மருவிய காலத்தின் பின் வந்த களப்பிரர் காலத்தில் வைதீகத்தின் கொட்டம் அடக்கப்பட்டு சமணம் தழைத்தோங்கி இருந்தது. களப்பிரர்களை வீழ்த்திய பாண்டியபல்லவர்கள் காலத்தில் ஆற்றுப் பாசனம் வளர்ச்சி பெற்று வேளாண் உற்பத்தி பெருகியது. சிற்றரசுகள் வீழ்த்தப்பட்டு பெருவேந்தர்கள் உருவாகும் வரலாற்றுக் கட்டத்தைச் சேர்ந்தது சோழர் ஆட்சி. கழுவேற்றி சமணத்தைக் கருவறுத்த சைவத்தின் வெற்றி, ராஜராஜனின் பேரரசு உருவாக்கத்தோடு ஒருங்கிணைந்தது. இக்காலத்தில் தான் சைவக்கொழுந்துகளான வேளாளர்களும் பார்ப்பனர்களும் கூட்டணி கட்டிக் கொண்டு அதிகார மையமானார்கள். இவர்களின் ஆட்சிக்கு பெரியகோவில்தான் மைய அச்சாக இருந்தது.

ஆயிரம் ஆண்டுகளைக் கடந்து நிற்கும் இந்தக் கோவிலை அடிமைகளின் இலவச உழைப்புதான் உருவாக்கியது. தனது ஆட்சிக்காலத்தில் தொடர்ந்து போர்கள் நடத்திய ராஜராஜன் போரில் தோற்ற நாட்டு வீரர்களைக் கைதிகளாக்கிக் கொண்டுவந்து அவர்களின் உழைப்பிலேயே இக்கோயிலை எழுப்பினான். போர்க்களங்களில் இருந்து கைதிகளை மட்டுமல்ல, இக்கோவிலுக்குத் தேவையான அனைத்தையும் கொள்ளையடித்துத் தான் கொண்டு வந்தான்.




**அண்டை நாடெங்கும் போர்தொடுத்து கொள்ளையடித்த பொருட்களால் உருவானதுதான் தஞ்சைப் பெரியகோயில்.**

மேலைச் சாளுக்கிய மன்னன் சத்தியாசிரயனை வென்றபோது கைப்பற்றப்பட்ட செல்வங்களும், ஈழம், கேரளத்தின் தென் பகுதி, ஆந்திரத்தின் தென் பகுதி ஆகியவற்றை வென்று அந்நாடுகளின் கருவூலங்களைக் கொள்ளை அடித்த செல்வங்களும் தான் 216 அடிக் கற்கோபுரமாகியது. மலைநாடு எனப்படும் சேரநாட்டை வென்றபோது எடுத்து வந்த பொன் நகைகளும், பாண்டிய நாட்டை வென்றபோது கொள்ளையடித்து வந்த முத்து, பவளங்களும்தான் பெருவுடையாருக்குரிய நகைகளாயின.

சாளுக்கிய நாட்டிலிருந்து கொள்ளையிட்டு பெருவுடையாருக்கு சொந்தமாக்கப்பட்ட 87.593 கிலோ தங்க நகைகளும், சேர, பாண்டிய நாட்டுக் கொள்ளையில் கிடைத்த 95.277 கிலோ வெள்ளியும் இதில் அடக்கம். ஈழப்போரின்போது கைப்பற்றப்பட்ட கிராமங்கள் பெரிய கோவிலுக்கான வருவாய்க் கிராமங்களாக (நிவந்தம்) விடப்பட்டிருந்தன. இவ்வாறு அண்டை நாடெங்கும் போர் தொடுத்து கொள்ளையடித்த பொருட்களால் உருவானதுதான் தஞ்சைப் பெரியகோவில்.

இக்கோவில் உருவாவதற்காக தென்னகத்தில் தொடர்ந்து ரத்த ஆறு ஓடிக் கொண்டே இருந்தது. காந்தளூர் முதல் ஈழம் வரை இதற்காக ராஜராஜன் படை எடுத்துப் பேரழிவை நடத்தினான். காந்தளூரில் (இன்றைய திருவனந்தபுரத்தின் ஒரு பகுதி) சேரனைத் தோற்கடித்து, உதகை நகர் (கல்குளம் வட்டம்) கோட்டை தகர்க்கப்பட்டு எஞ்சிய நகரெங்கும் தீவைக்கப்பட்டது. இது அவனுடைய மெய்க்கீர்த்தியில் 'காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி' என்று சொல்லப்படுகிறது.

அண்மையில் கண்டறியப்பட்ட கல்வெட்டில் இதன் அடுத்த வரி 'மலையாளிகள் தலை அறுத்து' என்றுள்ளதாக முனைவர் தொபரமசிவம் குறிப்பிடுகிறார். அடுத்து மேலைச் சாளுக்கிய மன்னன் சத்தியாசிரயனைத் தோற்கடித்த போரில் நகரங்களைக் கொளுத்தியும், குழந்தைகள் எனக்கூடப் பாராது அனைவரையும் கொன்று வெறியாட்டம் போட்டது சோழர்படை. கன்னிப் பெண்களைக் கைப்பற்றி மனைவியராக்கிக் கொண்டும் அளவற்ற பொருட்களைக் கவர்ந்து கொண்டும் தன் நாட்டிற்குத் திரும்பினர்.

ஈழத்தின் மீது படை எடுத்து அந்நாட்டு அரசியையும், அவளுடைய மகளையும் கைப்பற்றி வந்தனர். புத்தசமய நினைவுச் சின்னங்களில் இருந்த பொன்னாலான உருவங்களைக் கொள்ளை அடித்தனர். இந்தப் படையெடுப்பின்போது அனுராதபுரம் நகரை தீவைத்து அழித்தனர். புது நகராக பொலனருவாவை உருவாக்கினர். ஜார்ஜ் புஷ், ஈராக்குக்கு ஜனநாயகம் வழங்கியதைப் போல ஜனநாதபுரம் என அதற்குப் பெயருமிட்டனர்.

பெரிய கோவில் இறைத் திருமேனிக்கு ராஜராஜன் அளித்தது 2.692 கிலோ தங்கமாகும். பெரிய கோவிலுக்குச் சொந்தமான நிலங்களில் இருந்து காணிக் கடனாக ஆண்டொன்றுக்கு வந்த நெல் மட்டும் 1 லட்சத்து 20 ஆயிரம் கலம். ஆண்டொன்றுக்கு கோவிலுக்கு வந்த வருவாயில் நெல் தவிர பொன், 300 களஞ்சு, காசுகள் 2 ஆயிரம் என நாட்டின் ஒட்டுமொத்த செல்வமுமே பெரிய கோவிலில் குவிக்கப்பட்டிருந்தது. இவற்றை நிர்வாகம் செய்வதற்கென 4 பண்டாரிகள், 116 பரிசாரகர்கள், 6 கணக்கர், 12 கீழ்க்கணக்கர் பெரியகோவிலில் பணி புரிந்தனர். கோவிலுக்கு நெல்லும், பொன்னும் கட்டாயமாகத் தரவேண்டும் என 57 கிராமங்களுக்கு ராஜராஜன் உத்தரவிட்டிருந்தான்.

அன்றாடம் இந்தக் கோவில் இயங்குவதற்கான இலவச உழைப்பும் மக்களிடம் இருந்து பெறப்பட்டது. இக்கோவிலுக்கு நந்தா விளக்கெரிப்பதற்காக 400 இடையர்கட்கு 'சாவா மூவாப் பேராடுகள்' எனும் பெயரில் ஆடு, மாடு, எருமைகள் வழங்கப்பட்டன. 'வெட்டிக் குடிகள்' என அழைக்கப்பட்ட இந்த 400 பேரும் கோவிலுக்கு விளக்கெரிக்க நாளொன்றுக்கு உழக்கு நெய் கொடுக்க வேண்டும் என விதிக்கப்பட்டிருந்தது. கோவிலுக்குக் கொடுத்தது போக, இவர்களுக்கு ஆடுமாடுகளிடமிருந்து கிடைத்த உபரியைத் தவிர வேறு சம்பளம் கிடையாது. கால்நடைகளின் எண்ணிக்கை குறையாமல் அவற்றைப் பராமரித்து கோவிலுக்கு நெய் அளக்கும் 'வெட்டிக் குடி' (ஊதியம் இல்லா வேலையாட்கள்) களாக அவர்களின் உழைப்பு உறிஞ்சப்பட்டது. நெய் அளக்கத் தவறிய இடையர்களின் உடைமைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

வெட்டிக்குடிகளைப் போன்றே பல பெண்கள், பெரிய கோவில் நெல் குற்று சாலையில் சம்பளம் இன்றி வேலை செய்ய அமர்த்தப்பட்டனர். ஆனால், பார்ப்பனர்களுக்கென்று, வேதம் கற்க பாடசாலைகள், உணவு உறைவிட வசதிகளுடன் ஆரம்பிக்கப்பட்டன. இப்பாடசாலை மாணவர்களுக்கு 6 கலம் நெல்லோடு 1 பொன் உபகாரச் சம்பளமாகவும் வழங்கப்பட்டது.

விவசாயிகளுக்கு வட்டிக்குக் கடன் கொடுத்தும், நிலப்பறிப்புச் செய்தும், அரசு வல்லமையால் வரி தண்டிச் சுரண்டியும்தான் பெரியகோவில் வானுயர்ந்து நின்றது.

இவ்வாறு பெரிய கோவில் செழித்திருந்த காலத்தில் பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் வாழ்க்கை எப்படி இருந்தது?

(தொடரும்)

## புதுவையில் அன்னை மணியம்மையார் நூற்றாண்டு – பொதுக் கூட்டம்

திராவிடர் இயக்க தமிழர் உரிமை மீட்பு விளக்கப் பொதுக் கூட்டம், புதுச்சேரியில் அன்னை மணியம்மையார் நூற்றாண்டு நினைவு நாளுடன் இணைத்து நடத்தப்பட்டது. ஜூன் 15, 2019 அன்று மாலை அரியாங்குப்பம் பிரம்மா சிலை அருகே நடந்த கூட்டத்தில் திமுக. சட்டமன்ற உறுப்பினர் இரா. சிவா, அன்னை மணியம்மையார் படத்தைத் திறந்து வைத்தார். பெரியார் தொண்டர் சக்கினாமா படத்தை தென்சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா. உமாபதி திறந்து வைத்துப் பேசினார். யாழ் திலீபன் (தி.க.), பேராசிரியர் சுந்தரவள்ளி சிறப்புரையாற்றினர். பெரியார் சிந்தனையாளர் இயக்க சார்பில் நடந்த இந்தப் பொதுக் கூட்டத்தை தோழர் தீனா ஒருங்கிணைத்தார். பெருமளவில் மக்கள் திரண்டு இறுதிவரை கருத்துகளைக் கேட்டனர்.



DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கூடங்குளத்தில் அணுக்கழிவு: தமிழர்கள் சோதனை எலிகளா?

கூடங்குளம் அணு உலைகளில், எரி பொருளாகப் பயன்படும் யுரேனியம் பயன்பாட் டுக்குப் பிறகு புளூட்டோனியம் அணுக்கழிவாக மாறுகிறது. அந்தக் கழிவு, அணு உலைக்குக் கீழே உள்ள குட்டையில் சேமிக்கப்படுகிறது. அந்தக் குட்டையில் எட்டு ஆண்டுகளுக்கு மட்டுமே இந்தக் கழிவுகளை சேமிக்க முடியும். எனவே, அணுஉலையில் உருவாகும் புளூட்டோனியம் கழிவு உலைக்கு வெளியே எடுக்கப்பட்டு கூடங்குளம் வளாகத்துக்குள்ளாகவே பாதுகாப்பாக வைக்கப் போகிறார்களாம். இந்த செயல் முறைக்கு 'Away From Reactor' (AFR) என்று பெயர்.

இந்த மையத்திலும் கழிவுகள் நிரந்தரமாகச் சேமித்து வைக்கப் படாது; இது ஒரு தற்காலிகமான அணுக்கழிவு மையம் என்கிறார்கள். ஆனால், அணுக்கழிவை 'ஆழ்நிலைக் கருவூலம்' (Deep Geological Repository-DGR) என்னும் முறையில் நிரந்தரமாகச் சேமித்து வைப்பதுதான் சரியானது. அப்படி நிரந்தரமாகச் சேமித்து வைக்க வேண்டும் எனில் பூமிக்கு அடியில் பல கி.மீட்டர் ஆழத்தில் புதைக்க வேண்டும். தற்காலிகமாகச் சேமிக்கும் மையத்தில் பாதுகாப்பு இருக்காது. ஏதாவது அசம்பாவிதம் நேர்ந்து விட்டால், விளைவுகள் கொடூரமானதாக இருக்கும். 'உலகில் பல நாடுகளில் அணுக் கழிவுகளை அந்தந்த அணுஉலை வளாகத் துக்குள்தானே சேமிக்கிறார்கள்...' என்று கூறலாம். ஆனால், அதற்கான விளைவுகளைத்தான் செர்னோபில், புகுஷிமா ஆகிய அணுஉலை விபத்துகளின் போது உலகம் தெரிந்துகொண்டது.

கூடங்குளம் அணுஉலை தொடர்பாகப் பூவுலகின் நண்பர்கள் அமைப்பு உச்ச நீதிமன்றத்தில் கடந்த 2012ஆம் ஆண்டு வழக்குத் தொடுத்தது. இந்த வழக்கில், 2013ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கிய உச்ச நீதிமன்றம், 15 நிபந்தனைகளைக் கூறி உலை செயல்பட அனுமதித்தது. அதில் முக்கியமான நிபந்தனை, 'அணுக்கழிவுகளை உலைக்கு வெளியே வைப்பதற்கான வசதியை ஐந்து ஆண்டுகளில் உருவாக்க வேண்டும் என்பதாகும். ஐந்து ஆண்டு கால அவகாசம் 2018 மார்ச் மாதமே முடிந்துவிட்டது. ஆனால், அதற்கு முன்னதாக 2018 பிப்ரவரி மாதமே, 'மேலும் ஐந்து ஆண்டுகள் கால அவகாசம் வேண்டும்' என்று உச்ச நீதிமன்றத்தில் தேசிய அணுமின் கழகம் மனு ஒன்றைத் தாக்கல் செய்தது. அதில், 'அணுக்கழிவுகளை உலைக்கு வெளியே வைப்பதற்கான கட்டமைப்பை வடிமைப்பதில் உள்ள தொழில்நுட்பங்கள் முழுவதுமாக கைவராத நிலையில், அதை அமைப்பதில் பல்வேறு சிக்கல்கள் உருவாகியுள்ளன. அதனால்தான் மேலும் ஐந்து ஆண்டுகள் அவகாசம் வேண்டும்' என்று அணுமின் கழகம் கூறியிருந்தது. மேலும் அதே மனுவில், 'இதைப் போன்ற மென்நீர் உலைகள் இந்தியாவிலேயே முதல்முறையாகக் கூடங்குளத்தில்தான் அமைக்கப்பட்டுள்ளதால், இது மிகவும் சவாலான பணியாகவே இருக்கும்' என்றும் தெரிவித்திருந்தது.

இதையடுத்து, 'அணுக்கழிவுகளை உலைகளுக்கு உள்ளேயே சேகரித்து வைப்பதால், விபத்து ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே AFR கட்டி முடிக்கப்படும் வரை கூடங்குளத்தில் உள்ள இரண்டு உலைகளிலிருந்து மேலும் கழிவுகள் உண்டாகாமல் இருக்க வேண்டும். அதனால், இந்திய அணுசக்தி கழகத்தின் கோரிக்கையை நிராகரித்துவிட்டு AFR மற்றும் DGR வசதிகளை ஏற்படுத்தி முடிக்கும்வரை இரண்டு உலைகளிலும் மின் உற்பத்தியை நிறுத்திவைக்க வேண்டும்' என்று பூவுலகின் நண்பர்கள் சார்பில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கைக் கடந்த ஆண்டு விசாரித்த உச்ச நீதிமன்ற தலைமை அமர்வு, 'கூடங்குளம் அணுஉலையில் அணுக்கழிவுகளைப் பாதுகாப்பாகக் கையாள என்னென்ன நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று 2018 ஜூலை முதல் வாரத்துக்குள் அணுஉலை ஒழுங்குமுறை ஆணையம் உச்ச நீதிமன்றத்தில் ஆய்வறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்' என்று கூறியது.

அதன்படி தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில், 'கூடங்குளம் அணு உலையில் உள்ள எரிபொருள் சேமிப்புக் கிடங்கு (Fuel Pool) அதன் முழு கொள்ளளவை இன்னும் எட்டவில்லை; மேலும் ஐந்து ஆண்டுகள் கால அவகாசம் வழங்கினால், AFR வசதியைக் கட்டி முடித்துவிடுவோம்' எனவும் கூறியிருந்தது. இதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் '2022-க்குள் AFR கட்டி முடிக்க வேண்டும்' என்று தீர்ப்பளித்தனர். இதன் தொடர்ச்சியாகத்தான், 'கூடங்குளம் வளாகத்துக்குள்ளாகவே 'AFR' வசதியைக் கட்டுவதற்குப் பொது மக்கள் கருத்துக்கேட்புக் கூட்டம் வருகிற ஜூலை மாதம் 10ஆம் தேதி, நெல்லை மாவட்டம் ராதாபுரத்தில் நடைபெறும்' என்று மாசுக் கட்டுப்பாடு வாரியம் அறிவித்திருக்கிறது.

இதுகுறித்து பூவுலகின் நண்பர்கள் அமைப்பைச் சேர்ந்த பொறியாளர் சுந்தர் ராஜன் கூறுவதாவது:

"அணுக்கழிவுகளை நிரந்தரமாகச் சேமித்து வைக்க உலக அளவில் பயன்படுத்தப்பட்டுவரும் 'ஆழ்நிலை கருவூலம்' அமைப்பதற்கான இடமும் தொழில்நுட்பமும் இன்றுவரை இந்தியாவிடம் இல்லை. இப்படியான நிலையில், AFR போன்ற தற்காலிக வசதியை நம்பித் தொடர்ந்து கூடங்குளத்தில் கழிவுகளை உற்பத்தி செய்வது மிகப் பெரிய அச்சுறுத்தலுக்கு வழிவகுக்கும். கூடங் குளத்தில் நடக்கும் இந்த விவகாரங்கள் குறித்து மாநில அரசு துளியும் கண்டுகொள்ளாமல் இருப்பது மிகுந்த வேதனை அளிக்கிறது. உலகம் முழுவதும் அணுக்கழிவு களைப் பாதுகாப்பாக வைக்கும் தொழில்நுட்பத்தை எந்த நாட்டிலும் இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்த நிலையில், சோதனை எலிகளாகத் தமிழ் மக்களை மாற்றும் விபரீதமான திட்டத்துக்கு தமிழக அரசு அனுமதி அளிக்கக்கூடாது. நிரந்தரக் கழிவு மையம் அமைப்பது குறித்த தெளிவான திட்டத்தை மத்திய அரசு உருவாக்கும்வரை கூடங்குளத்தின் இரண்டு உலைகளிலும் மின் உற்பத்தியை நிறுத்த வேண்டும். மேற்கொண்டு நான்கு உலைகள் கட்டு வதையும் கைவிடவேண்டும். ஜப்பான் நாட்டில், கடந்த 2011ஆம் ஆண்டு ஏற்பட்ட புகுஷிமா அணு உலை விபத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளை விட அதன் கழிவுகளால் ஏற்பட்ட பாதிப்புகள் தான் அதிகம்" என்று கூறினார்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

நிதிமன்றங்களுமே கிரிமிலேயர் அளவுகோலை ஒரே சீராக மாற்றி அமைக்க உத்தரவிட்டன. மத்திய அரசின் பாரபட்சமான அணுகுமுறையை இரண்டு நீதிமன்றங்களுமே கண்டித்தன. இவ்வளவுக்குப் பிறகும் கடந்த மார்ச் 2019 அன்றுமத்திய சட்ட அமைச்சகம் பிற்படுத்தப்பட்டோருக்கான நாடாளுமன்ற நிலைக் குழுவிடம் ஒரு தவறான தகவலை சமர்ப்பித்தது. 1993ஆம் ஆண்டு முதல் 'கிரிமிலேயரை' நிர்ணயம் செய்வதில் ஒரே அளவுகோல் தான் பின்பற்றப்பட்டு வருகிறது என்ற தவறான தகவலைத் தந்தது. பிற்படுத்தப்பட்டோர் ஆணையமும் கண்களை மூடிக் கொண்டு சட்ட அமைச்சகத்தின் அறிக்கையை அப்படியே ஏற்றுக் கொண்டுவிட்டது. பிற்படுத்தப்பட்டோர் ஊழிய நலச் சங்கத்தின் நீண்ட போராட்டத்துக்குப் பிறகு இப்போது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் இது குறித்து விசாரணை நடத்த முன் வைத்திருக்கிறது. 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடு (ஜூன் 14, 2019) இந்த விரிவான செய்தியை வெளியிட்டிருக்கிறது.

**தொகுப்பு : 'இரா'**

## இராசிபுரம் நகராட்சி பள்ளியில் சேகுவேரா பிறந்த நாள் விழா

சேகுவேரா 92 ஆவது பிறந்த நாள் விழா ஜூன் 14 வெள்ளிக்கிழமை அன்று திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் இராசிபுரம் பாரதிதாசன் சாலையில் அமைந்துள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளியில் கொண்டாடப்பட்டது. பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு சேகுவேரா, பெரியார், காரல்மார்க்ஸ், காமராசர், பகத்சிங், அம்பேத்கர், லெனின், புத்தர், பாரதிதாசன் போன்ற தலைவர்களின் வாழ்க்கை வரலாறு, சிந்தனைகள் அடங்கிய நூல்கள் மற்றும் எழுதுகோல்கள், இனிப்புகள் வழங்கப்பட்டன. மேலும் பள்ளிக்கு பெரியார் உருவப்படம் வழங்கப்பட்டது. இராசிபுரம் நகர வளர்ச்சி மன்றத்தின் சார்பில் மின்விசிறி வழங்கப்பட்டது. நிகழ்விற்கு, பிடல்சேகுவேரா (நகரஅமைப்பாளர் தி.வி.க.) தலைமை வகித்தார். மணிமாறன், நகர செயலாளர் சி.பி.ஐ. முன்னிலை வகித்தார். சுமதி மதிவதனி (தி.வி.க) வரவேற்புரையாற்றினார். சிறப்புஅழைப்பாளர்களாக வி.பாலு, தி.மு.க. முன்னாள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர். சுந்தரம், அ.தி.மு.க. மீனா, மாவட்டச் செயலாளர், தேசிய மாதர் சம்மேளன சங்கம், பூபதி, கமல்ஹாசன் நற்பணி இயக்கம் ஆகியோர் பங்கேற்றனர். இறுதியாக ஆசிரியர் அருணகிரி நன்றியுரையாற்றினார்.

**வெளிவந்து விட்டது**

**'நிமிர்வோம்' – ஜூன் 2019 இதழ்**




மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...

தனி இதழ் விலை : ரூ.20

தொடர்புக்கு: நிர்வாகி, 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600 004.

தொலைபேசி எண்: 044 24980745 / 7299230363 / 7373684049

www.dvkperiyar.com/nimirvomdvk@gmail.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 20th June 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN